பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 08 2024 7 15

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சகோதரத்துவத்தைப் போற்றும் ரக்ஷாபந்தன் பண்டிகை இன்று கொண்டாடப்படுதை ஒட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வாழ்த்து தெரிவித்துள்ளார்.
- மலேஷியப் பிரதமர் திரு. டத்தோ செரி அன்வர் பின் இப்ராஹிம் மூன்று நாள் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.
- மேற்குவங்க மாநிலத்தில் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் பாதுகாப்பை பலப்படுத்துமாறு அம்மாநில ஆளுநர் திரு. சி.வி. அனந்தபோஸ் உத்தரவிட்டுள்ளார்.
- ஜம்மு-கஷ்மீரில் அமர்நாத் யாத்திரை இன்று காலையுடன் நிறைவடைந்தது.
- பங்களாதேஷில் விரைவில் தேர்தல் நடைபெறும் என்று அந்நாட்டு இடைக்கால அரசின் முதன்மை ஆலோசகர் திரு. முகமது யூனுஸ் தெரிவித்துள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி கூட்டாட்சி தத்துவத்தை வலுப்படுத்தியவர் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

தமிழகத்தில் சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கருணாநிதியின் நூற்றாண்டு நினைவு நாணயத்தை வெளியிட்டு அவர் பேசினார்.

பன்முகத்தன்மை கொண்ட கட்சிகளுடன் இணக்கத்தை கடைபிடித்தார் என்றும், அவரது பொதுநல தொண்டால் நாட்டிற்கு நன்மையாக அமைந்தது என்றும் தெரிவித்தார்.

நாட்டின் வளர்ச்சிக்கு மாநிலங்களின் வளர்ச்சி அவசியம் என்று அவர் வலியுறுத்தியதாக கூறினார்.

அடித்தட்டு மக்களுக்கு தரமான கல்வி அளிக்க பல்வேறு திட்டங்களை கருணாநிதி அமல்படுத்தினார் என்று அவர் கூறினார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் திமுக அங்கம் வகித்தது குறித்து குறிப்பிட்ட அவர், அப்போது வெற்றிகரமான கூட்டணி அமைய காரணமாக திகழ்ந்தார் என்றும் தெரிவித்தார்.

மகளிர் சுயஉதவிக் குழு திட்டத்தை தொடங்கி மகளிர் மேம்பாட்டிற்கு காரணமாக கருணாநிதி திகழ்ந்தார் என்றும் திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

முன்னதாக திரு. ராஜ்நாத் சிங் வெளியிட்ட கருணாநிதி நூற்றாண்டு நினைவு நாணயத்தை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் பெற்றுக்கொண்டார்.

பின்னர் உரையாற்றிய அவர், மறைந்த முதலமைச்சர் கருணாநிதி மாநில உரிமைகளுக்காக குரல் கொடுத்தவர் என்றும், சுதந்திர தினத்தில் மாநில முதலமைச்சர்கள் தேசியக் கொடியை ஏற்றும் உரிமையைப் பெற்றுத் தந்தவர் என்றும் குறிப்பிட்டார்.

அவரது வழியில் திமுக அரசு, தேர்தலில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வருவதாகத் தெரிவித்தார்.

கருணாநிதியின் நூற்றாண்டு நினைவு நாணயத்தை வெளியிட ஒப்புதல் அளித்த பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசுக்கும், நிகழ்ச்சியில் பங்கேற்ற அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங்கிற்கும் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன், மாநில அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

<<<<>>>>

மலேஷியப் பிரதமர் திரு. டத்தோ செரி அன்வர் பின் இப்ராஹிம் மூன்று நாள் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

நாளை அவர் பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து இருதரப்பு பேச்சு நடத்த உள்ளார்.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் ஆகியோரையும் மலேசியப் பிரதமர் சந்தித்துப் பேச உள்ளதாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. அன்வர் பின் இப்ராஹிம் மலேஷிய பிரதமராக பொறுப்பேற்ற பின் இந்தியா வருவது இதுவே முதல்முறை என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

சகோதரத்துவத்தைப் போற்றும் ரக்ஷாபந்தன் பண்டிகை இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சகோதரர்கள், சகோதரிகளுக்கு இடையேயான பரஸ்பரம் நம்பிக்கை, அன்பு ஆகியவற்றை வலுப்படுத்துவதற்கான நாளாக இப்பண்டிகை கொண்டாடப்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நமது உறுதிப்பாட்டை இப்பண்டிகை வலுப்படுத்துவதாக குடியரசுத்தலைவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் அமர்நாத் யாத்திரை இன்று காலையுடன் நிறைவடைந்தது.

கடந்த ஜூன் மாதம் 29ஆம் தேதியன்று தொடங்கிய இந்த யாத்திரை, 43 நாட்கள் நடைபெற்றது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 5 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்த யாத்திரை மேற்கொண்டுள்ளனர்.

இன்று காலை சூரிய உதயத்திற்கு முன்பாக பூஜைகள் நடைபெற்று யாத்திரை நிறைவடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பங்களாதேஷில் விரைவில் தேர்தல் நடைபெறும் என்று அந்நாட்டு இடைக்கால அரசின் முதன்மை ஆலோசகர் திரு. முகமது யூனுஸ் தெரிவித்துள்ளார்.

தலைநகர் டாக்காவில் பல்வேறு நாடுகளின் தூதர்களுடன் அவர் உரையாடினார்.

தேர்தல் ஆணையம், நீதித்துறை, சிவில் நிர்வாகம், பாதுகாப்புப் படை மற்றும் ஊடகத் துறைகளில் சீர்திருத்தம் மேற்கொண்ட பிறகு நியாயமான முறையில் தேர்தல் நடைபெறும் என்று அவர் கூறியுள்ளார்.

நாட்டில் சட்டம்-ஒழுங்கை பராமரிப்பதே இடைக்கால அரசின் முதன்மையான நோக்கமாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

அனைத்து நாடுகளுடனும் இடைக்கால அரசு நட்புறவை வளர்க்கும் வகையில் செயல்படும் என்று திரு. முகமது யூனுஸ் தூதர்களிடம் உறுதியளித்தார்.

<<<<>>>>

உணவுப் பதப்படுத்துதல் துறை விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க உதவுவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. சிராக் பஸ்வான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசிய அவர், இத்துறை மூலம் மாநிலங்களின் வருவாய் அதிகரிப்பதாகவும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதாகவும் கூறினார்.

உலக உணவு இந்திய திருவிழா அடுத்த மாதம் 19ஆம் தேதி நடைபெற உள்ளதை சுட்டிக்காட்டிய அவர், இதன் மூலம் உணவு பதப்படுத்துதல் துறையில் இந்தியாவின் பங்களிப்பு குறித்து எடுத்துக்காட்டப்படும் என்று குறிப்பிட்டார்.

இத்துறையில் ஈடுபட்டுள்ள அவர்களை ஒருங்கிணைக்க இது சிறந்த வாய்ப்பு என்றும் அவர் தெரிவித்தார்.

தமது அமைச்சகத்தின் திட்டங்கள் சுய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதாக குறிப்பிட்டார்.

அத்துடன் இந்திய உணவுப்பொருட்களை உலக அளவில் பிரபலப்படுத்தவும் தமது அமைச்சகம் செயல்பட்டு வருவதாகவும் திரு. சிராக் பஸ்வான் கூறினார்.

<<<<>>>>

கடலோர காவல்படையின் தலைமை இயக்குநர் ராகேஷ்பால் சென்னையில் நேற்று காலமானார். அவருக்கு வயது 59.

உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்ட அவர், ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதையடுத்து பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் உள்ளிட்டோர் மருத்துவமனைக்குச் சென்று ராகேஷ் பாலின் உடலுக்கு மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

ராகேஷ் பாலின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ள திரு. ராஜ்நாத் சிங், அவரது தலைமையின்கீழ் நாட்டின் கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்துவதில் சிறந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், இந்திய கடல்சார் பாதுகாப்புக்கு ராகேஷ் பால் ஆற்றிய இணையற்ற பங்களிப்புக்காக என்றும் நினைவுகூறப்படுவார் என்று கூறியுள்ளார்.

<<<<>>>>

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தின்போது மத்திய அரசின் துறைகளில் நேரடி சேர்க்கை மூலம் காலிப்பணியிடங்கள் நிரப்பபப்பட்டதாக மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

பல்வேறு அமைச்சகங்களில் இணைச் செயலாளர்கள், இயக்குநர்கள், துணைச் செயலாளர்கள் பதவிகளுக்கு காலியாக உள்ள 45 பணியிடங்களை நிரப்புவதற்கு அண்மையில் மத்திய குடிமைப் பணியாளர் தேர்வாணையம் விளம்பரம் வெளியிட்டிருந்தது.

இந்நடவடிக்கையை காங்கிரஸ் கட்சி குறை கூறியதை அடுத்து அவர் இந்த விளக்கத்தை அளித்துள்ளார்.

கடந்த 2005ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. வீரப்ப மொய்லி தலைமையிலான நிர்வாக சீர்திருத்தக் குழு பல்வேறு பதவிகளுக்கு சிறப்பு நிபுணத்துவம் கொண்டவர்களை நியமிக்கலாம் என்று பரிந்துரை செய்திருந்ததாக கூறினார்.

இந்த பரிந்துரையை அமல்படுத்தும் வகையில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு வெளிப்படைத்தன்மை முறையில் காலிப்பணியிடங்களை நிரப்பும் என்று திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்தார்.

முன்னதாக இந்நடவடிக்கை நாட்டின் இடஒதுக்கீட்டுக் கொள்கையை பாதிக்கும் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி மத்திய அரசைக் குற்றம் சாட்டி இருந்தார்.

<<<<>>>>

மத்திய தகவல் ஒலிபரப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் சென்னை அகில இந்திய வானொலி மற்றும் தூர்தர்ஷன் தொலைக்காட்சி நிலையத்தில் இன்று ஆய்வு மேற்கொள்கிறார்.

தென் மண்டலத்தில் உள்ள மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தைச் சார்ந்த உயர் அலுவலர்கள் இந்தக் கூட்டததில் கலந்துகொள்கின்றனர்.

அனைத்து அலுவலகங்களின் செயல்பாடுகள் மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்து அவர்கள் இந்தக் கூட்டத்தில் எடுத்துரைக்க உள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் ஆந்திரா, தெலங்கானா, கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களைச் சார்ந்த உயரதிகாரிகள் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

மேற்குவங்க மாநிலத்தில் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் பாதுகாப்பை பலப்படுத்துமாறு அம்மாநில ஆளுநர் திரு. சி.வி. அனந்தபோஸ் உத்தரவிட்டுள்ளார்.

கொல்கத்தாவில் உள்ள ஒரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பெண் பயிற்சி மருத்துவர் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதை அடுத்து அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

பெண் மருத்துவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இதற்கிடையே மருத்துவர் கொலை செய்யப்பட்டது தொடர்பான வழக்கை உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து நாளை விசாரிக்க உள்ளது.

தலைமை நீதிபதி சந்திரசூட், நீதிபதிகள் ஜே.பி. பர்திவாலா, மனோஜ் மிஸ்ரா ஆகியோரைக் கொண்ட அமர்வு இவ்வழக்கை விசாரிக்க உள்ளது.

<<<<>>>>

வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், நேபாள வெளியுறவு அமைச்சர் திரு. அர்ஸூ ரானா தியுபாவுடன் இன்று புதுதில்லியில் இருதரப்பு பேச்சு நடத்த உள்ளார்.

இந்தியா – நேபாளம் இடையே வழக்கமாக நடைபெறும் உயர்நிலைக் குழு கூட்டத்தின் ஒரு பகுதியாக இந்த சந்திப்பு நடைபெற உள்ளது என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக 5 நாள் பயணமாக நேபாள வெளியுறவு அமைச்சர் நேற்று புதுதில்லி வந்தடைந்தார்.

<<<<>>>>

மேற்குவங்கம், நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து அம்மாநிலங்களுக்கு ஆரங்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பீஹார், சத்தீஸ்கர் மாநிலங்களில் கன முதல் மிக கனத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே தமிழகத்தில் நீலகிரி, கோவை மாவட்ட மலைப் பகுதிகளில் இன்று கன முதல் மிக கனத்த மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசிய அந்த மையத்தின் இயக்குநர் திரு. செந்தாமரைக் கண்ணன், நீலகிரி முதல் கன்னியாகுமரி வரையிலான மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மதுரை, ராமநாதபுரம், தூத்துக்குடி, விருதுநகர் உள்ளிட்ட தென் மாவட்டங்களின் சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்று கூறினார்.

அத்துடன் திருப்பூர், தேனி, திண்டுக்கல், தென்காசி, ஈரோடு, தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல் ஆகிய வட உள் மாவட்டங்களின் குறிப்பிட்ட பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்தார்.

<<<<>>>>